இனிமையான குழந்தைகளே! உங்களுடைய இந்த பிறவி மிகவும் விலை மதிப்பிட முடியாதது. ஏனெனில் சுயம் தந்தை உங்களுக்கு சேவை செய்கிறார். இலட்சிய சோப் மூலமாக உங்கள் துணியை சுத்தம் செய்கிறார்.

கேள்வி: யார் அல்லாவை சிருஷ்டியின் படைப்புக் கர்த்தா என்று கூறுகிறார்களோ அவர்களிடம் எந்த ஒரு கேள்வி கேட்க வேண்டும்?

பதில்: அவர்களிடம் கேளுங்கள், அல்லா சிருஷ்டியை படைத்துள்ளார் என்றால் படைப்பதற்கு அவருக்கு பெண் வேண்டும். அப்படியானால் அல்லாவினுடைய பெண் (மனைவி) யார்? காட் ஃபாதர் என்று கூறுகிறீர்கள் என்றால் அவசியம் மதர் (தாய்) கூட வேண்டும். அல்லவா? குழந்தைகளாகிய நீங்கள் இந்த ஆழமான இரகசியத்தை நல்ல முறையில் அறிந்துள்ளீர்கள். இந்த பிரம்மா, அல்லாவினுடைய மனைவி ஆவார். இவர் உங்களுடைய பெரிய தாய் ஆவார். இந்த விஷயத்தை மனிதர்கள் புரிந்து கொள்ள முடியாது.

பாடல்: யார் இந்த எல்லா விளையாட்டையும் படைத்தார்...

ஓம்சாந்தி.எந்தவொரு மனிதரும் இந்த பாடலுக்கு சரியான பொருள் கூற முடியாது என்பதை குழந்தைகள் அறிந்துள்ளார்கள். நாடகத்தை அமைப்பவர்களுக்குக் கூட தெரியாது. சாஸ்திரங் களை உருவாக்குவது போல் அப்படியே பாடல்களையும் உருவாக்கி விடுகிறார்கள்,. ஆனால் ஒன்றுமே புரியாமல் உள்ளார்கள். நீங்கள் வேதங்களைப் பற்றி கூறும்போது இவை தர்ம சாஸ்திரங்கள் அல்ல என்று கூறுகிறீர்கள். சாஸ்திரங்கள் என்று கூறலாம், ஆனால் தர்ம (மதம்) சாஸ்திரம் அல்ல. இப்பொழுது தர்ம சாஸ்திரத்தினாலோ ஏதாவது நன்மை ஆக வேண்டும். தர்ம சாஸ்திரம் என்பதன் பொருள் கூட புரிவதில்லை. சாஸ்திரம் என்றால் யாராவது ஒருவர் மூலமாக ஏதாவது தர்ம ஸ்தாபனை ஆவது. எனவே வேத உபநிடதங்கள் எந்த தர்மத்தின் சாஸ்திரம் என்று கேட்க வேண்டும். அந்த தர்மத்தை யார் ஸ்தாபனை செய்தார்? இவற்றினால் எந்த ஒரு தர்மமும் வெளிப்படுவ தில்லை. என்னென்ன தர்மங்கள் உள்ளன என்பது கூட விளக்கப்படுகிறது, எப்படி மரத்தில் முக்கியமானது அடிமரம், பிறகு பெரிய கிளை அதன் பின்பு சிறு சிறு கிளைகள் வெளிப்படுகின்றன. எனவே குழந்தைகளுக்கு விளக்கப்படுவதாவது - சர்வ சாஸ்திர சிரோன்மணி கீதை என்ற தர்ம சாஸ்திரமானது அடிமரம், அதற்குப் பிறகு மற்ற எல்லாமே படைப்பு ஆகும். இந்த இஸ்லாமிய, பௌத்த, கிறிஸ்துவ தர்மங்கள் ஆகிய எல்லாமே இந்த கல்ப விருட்சத்தின் கிளைகள் ஆகும். மனித சிருஷ்டியின் விருட்சம் என்று கீதையில் கூட எழுதப்பட்டுள்ளது. எனவே இந்த விருட்சத்தின் இரகசியம் இப்பொழுது புத்தியில் பதிந்துள்ளது. இதன் முக்கிய தண்டு ஆதி சனாதன தேவி தேவதா தர்மம் ஆகும். இந்த மரம் ஆலமரத்துடன் ஒப்பிடப்படுகிறது. அது மிகப் பெரிய மரமாகும். அது பழையதாகி விடும் பொழுது அதன் வேர்ப்பகுதி அழுகிவிடுகின்றது. மற்ற கிளைகள் இருக்கின்றன இதுவும் அவ்வாறே ஆகும். இந்த விருட்ஷத்தின் வேர்ப்பகுதியான தேவி தேவதா தர்மம் இப்பொழுது இல்லை என்பதை குழந்தைகள் அறிவார்கள். பரமாத்மா 24 அவதாரம் எடுக்கிறார் என்றால் பின் அவர் சர்வ வியாபியாக இருக்க முடியாது. அவதாரம் எடுக்கிறார் என்றால் அவரை சர்வவியாபி என்று எவ்வாறு கூறுவீர்கள்? புது விஷயம் ஆகிறது அல்லவா? எவ்வளவு பெரிய

விருட்சம் ஆகும். வேர்ப்பகுதி இல்லவே இல்லை! நாங்கள் ஆதி சனாதன தேவி தேவதா தர்மத்தைச் சார்ந்தவர்கள் என்று சொல்லக் கூடிய ஒரு மனிதனும் இல்லை.

சத்யுகத்தை இலட்சக்கணக்கான வருடங்கள் பின்னுக்கு எடுத்துச் செல்கின்றார்கள். எவ்வளவு கடினமான விஷயமாக ஆகிவிட்டுள்ளது! இப்பொழுது எல்லா மனிதர்களும் மிகவும் துக்கத்தில் உள்ளார்கள். சுகமாக யார் ஆக முடியும்? சந்நியாசிகளுடைய புத்தியில் கூட காக்கை எச்சத்திற்குச் சமமான சுகம் தான் உள்ளது மற்றும் ஏராளமான துக்கம் உள்ளது என்ற வேற்றுமை வரவே வராது. அவர்களுக்கு இது தெரியாது. இப்பொழுது தந்தை கூறுகிறார் - உங்களை அளவற்ற சுகத்தில் மீண்டும் அழைத்துச் செல்கிறேன். இச்சமயம் தனது பார்ட்டை நடித்து எல்லாமே செய்து விட்டு மறைந்து விடுகிறார். பார்ட்டோ எல்லோரும் தான் நடிக்கிறார்கள். இஸ்லாமி, பௌத்த மதத்தினர் ஆகிய எல்லோருமே மறைந்து விடுவார்கள். மேலே சென்று விடுவார்கள். இதுகூட யாருக்கும் தெரியாது மனிதர்களுக்குத் தான் இது விளக்கப்படுகிறது. மிருகங்களுக்கோ கூற மாட்டார்கள். மனிதப் பிறவி எல்லாவற்றையும் விட உயர்ந்தது என்று பாடப்பட்டுள்ளது. அது எப்படி? மேலும் மனித

உடலின் தோல் கூட எதற்கும் உதவுவதில்லை என்று கூறவும் செய்கிறார்கள். பிறகு கூறுகிறார்கள் மனித பிறவி உத்தமமானது, என்று உண்மையில் உங்களுடைய இந்த பிறவி உத்தமமானது. இந்த பிறவியில் தந்தையே அமர்ந்து உங்களுக்கு சேவை செய்கிறார். உலகத்தின் மனிதர்களின் இந்த வாழ்க்கை மிகவும் தாழ்ந்ததாக உள்ளது. நாம் கூட முதலில் சீ சீ அழுக்கு மனிதர்களாக இருந்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்போது பாபா நமது இந்த ஆடையை ஞான இலட்சிய சோப் மூலமாக சுத்தப்படுத்துகிறார் மற்றும் கூறுகிறார் - இப்பொழுது தங்கள் தந்தையை நினைவு செய்யுங்கள்.

இந்த உலகத்தில் தந்தையைப் பற்றி யாருக்குமே தெரியாது. தந்தையை அறிந்து கொண்டால் தானே குழந்தை ஆக முடியும்! சிவனினுடையவர் ஆக வேண்டும், பிரம்மாவினுடையவர் ஆக வேண்டும். அப்பொழுது தான் பேரன்கள் என்று அழைக்கப்பட முடியும். பிராமணர்கள் கூட இரண்டு விதமாக உள்ளார்கள். ஒன்று (முக) வாய் வழி வம்சாவளி மற்றொன்று குக (வழக்கமான உலகீய பிறப்பு) வம்சாவளி. நீங்கள் பிரம்மாவின் முகவம்சாவளி (வாய் வழி ஞானம் கேட்டு பிறந்த) பிரம்மா குமார், குமாரிகள் ஆவீர்கள். பிரம்மாவின் தந்தை யார்? சிவபாபா. அவருக்கு தந்தையோ யாரும் கிடையாது. உங்களுக்கு கற்பிப்பவர் கூட அவர் தான். உங்களது குரு கூட அவர்தான். இப்பொழுது முன்னால் அமர்ந்துள்ளார் பின் மறைந்து விடுவார். தூய்மையற்ற உலகத்தை தூய்மையாக்கி தேவி தேவதா தர்மத்தின் ஸ்தாபனை செய்து மற்ற எல்லோரையும் முக்தி தாமத்திற்கு அழைத்துச் செல்வார். 21 பிறவிகளுக்கு சுகம் கொடுத்து விட்டார் பிறகு வேறென்ன வேண்டும், பாபா சதா சுகமுடையவர்களாகவே ஆக்குகிறார். மற்றபடி உயர்ந்த பதவி அடைவதற்கு புருஷார்த்தம் செய்ய வேண்டி யிருக்கும்.

கிருஷ்ணபுரி சுகதாமம் என்று அழைக்கப்படுகிறது. நாராயணரின் குழந்தைப் பருவம் காண்பிப் பதில்லை. கிருஷ்ணரின் சுயம்வரம் காண்பிக்கிறார்கள்.

இராதையுடன் சுயம்வரம் ஆகியுள்ளது என்றால் அதற்குப் பிறகு அவரது பெயர் என்னவாக மாறியது என்பதைக் காண்பிப்பதில்லை. இலட்சுமி நாராயணர் பற்றியோ மனிதர்களுக்கு தெரியவே தெரியாது. அவர்களது வாழ்க்கை சரித்திரம் பற்றி யாருக்குமே தெரியவே தெரியாது. நீங்கள் இப்பொழுது புரிந்து கொண்டிருக் கிறீர்கள். கோடியில் ஒருவர் தான் வெளிப்படுவார் அவர் முழுமையாக சக்கரம் சுற்றி வந்தவராக இருப்பார். யார் முதன் முதலில் பூஜ்ய நிலையிலிருந்து பூஜாரி ஆகிறார்களோ அவர்கள் தான் பக்தியை ஆரம்பிக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். பக்தர்களோ எல்லோருமே ஆவார்கள். கடுகுகளைப் பரப்பியது போல மனிதர்கள் உள்ளார்கள். இப்பொழுது பாவம், எல்லோருக்குமே கடுகு அரைக்கப்படுவது போன்ற மரணம், உள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்பொழுது குழந்தைகளாகிய உங்களுக்கு மிகப் பெரிய புத்தி (அறிவு) கிடைத்துள்ளது. 84 பிறவிகளின் சக்கரத்தை புத்தியில் இருத்துவது மிகவும் சுலபமாகும். நாம் இப்பொழுது பிராமணர்கள் ஆவோம். பின் நாமே தான் தேவதை ஆவோம். பிறகு 84 பிறவிகள் எடுக்க வேண்டி வரும். ஹம் சோ என்பதன் பொருள் கூட குழந்தைகளுக்கு விளக்கி உள்ளார். ஹம் சோ, சோ ஹம் (நாமே அது (தேவதா) அதுவே நாம்) என்று இங்கு தான் பாடுகிறார்கள். வேறு தர்மங்களில் இந்த வார்த்தையே கிடையாது. ஓம் என்றால் பகவான் என்று நினைத்துக் கொண்டு விடுகிறார்கள். உண்மையில் ஓம் என்றால் அஹம் (நான்) ஆத்மா. அவர்கள் பிறகு தவறாக ஆத்மாவிலிருந்து பரமாத்மா என்று கூறி விடுகிறார்கள். சரி பிறகு என்ன? நாம் சரீரமோ அல்ல. (நாமோ பரமாத்மாவாக இருந்தால்) பரமபிதா பரமாத்மாவோ நான் ஆத்மா எனது சரீரம் என்று கூற முடியாது. அந்த தந்தை கூறுகிறார், நான் (அஹம்) ஆத்மா என்பதோ சரி. நான் இந்த சரீரத்தை கடனாக எடுத்துள்ளேன். இது என்னுடைய செருப்பு கிடையாது. எனக்கு கால்கள் இல்லை, எனக்கு பாதங்களின் பூஜை செய்ய முடியாது. கிருஷ்ணருக்கு பாதங்கள் உள்ளன. எனக்கோ இல்லை. நான் இருப்பதே நிராகாராக. பார்க்கப்போனால் ஆத்மா கூட நிராகார் தான். ஆனால் அது 84 பிறவிகளில் வருகிறது. எனக்கோ சரீரம் இல்லை. நான் அசரீரி. உங்களுக்கும் கூறுகிறேன் - அசரீரி ஆகி என்னை நினைவு செய்யுங்கள். பாபா வந்து விட்டுள்ளார் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவரது பார்ட் என்ன? தூய்மை இழந்த சிருஷ்டியை மீண்டும் தூய்மையாக்குவது. நிராகார் ஏதோ சரீரத்தில் வந்திருக்கக் கூடும். மனிதர்களுக்குத் தெரியாத காரணத்தால் அவர்கள் முதல் இளவரசனான ஸ்ரீகிருஷ்ணர் பெயரை எழுதி விட்டுள்ளார்கள். இப்பொழுது ஸ்ரீகிருஷ்ணர் இங்கு எப்படி வர முடியும்? இதைப் புரிந்து கொண்டு அதன் பின் விளக்க வேண்டும்.

தாகூர் ஆகியோர் கீதைக்கு எவ்வளவு மகிமை செய்து கொண்டிருந்தார்! உண்மையில் கிருஷ்ணருக்குக் கூட மகிமை இல்லை. கிருஷ்ணரைக் கூட உருவாக்குபவர் சிவபாபா ஆவார். இவர் கிருஷ்ணரின் அநேக பிறவிகளின் கடைசி பிறவி ஆகும். பாபா கூறுகிறார் - சிறு குழந்தையின் சரீரத்தில் எப்படி அமர்ந்து ஞானம் கூறுவேன்? அவசியம் அனுபவம் உடைய ரதம் வேண்டும். நாடகப் படி எனக்கு இந்த ரதம் நியமிக்கப்பட்டுள்ளது. அப்படி இன்றி அடுத்த கல்பத்தில் வேறு ரதம் எடுப்பார் என்பதல்ல. பிரம்மா மூலமாகத்தான் ஸ்தாபனை செய்வார். முந்தைய கல்பத்தில் கூட பிரம்மாகுமார்-குமாரிகளாகிய நீங்கள் பிரம்மா மூலமாக ஆஸ்தி எடுத்திருந்தீர்கள். இப்பொழுது தந்தை கூறுகிறார். மற்ற தொடர்பை விடுத்து என்னுடன் தொடர்பை இணையுங்கள்.

என்னுடையவர் ஒரு சிவபாபா, இரண்டாமவர் யாருமில்லை. தந்தையும் தாயும் நீயே.... யாருக்கு இவ்வளவு மகிமை உள்ளதோ இப்பொழுது நீங்கள் அவருக்கு முன்னால் அமர்ந்துள்ளீர்கள் உண்மையில் நம்மை யார் படைத்தது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். கூறுகிறார்கள் - அல்லா படைத்தார் என்று. பின் அவசியம் அல்லாவிற்கு யாராவது துணைவி கூட இருந்திருக்க வேண்டும். அல்லாவோ நிராகார் ஆவார். அவரது மனைவி எங்கிருந்து வந்தார்? நீங்கள் காட் ஃபாதர் என்று கூறுகிறீர்கள் என்றால் ஃபாதர் எப்பொழுதும் படைப்புக் கர்த்தாவாக இருப்பார். மதர் - தாயே இல்லை என்றால் அவரை ஃபாதர் என்று எப்படி கூறுவீர்கள்? குழந்தை பிறக்கும் பொழுது தானே ஃபாதர் என்று கூறுகிறார்கள் அல்லவா? இறை தந்தையின் மனைவி யார் என்பது யாருக்குமே தெரியாது. இது எல்லாவற்றையும் விட இரகசியத்துடன் கூடிய விஷயங்கள் ஆதாம், பீபி இருவர் உள்ளனர். அவரை (பிரம்மா) ஆதம் என்று கூறினால் பின் சரஸ்வதியை பீபி என்று கூற முடியாது. அவர் பீபி என்றால் பின் அவரது தாய் யார்? இது மிகவும் புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும். தந்தை தான் அமர்ந்து விளக்குகிறார். இந்த கணக்குப்படி இவர் (பிரம்மா) எனக்கு மனைவி ஆனார். இவரது வாய் மூலமாக குழந்தைகளாகிய உங்களைப் படைக்கிறேன். பிரம்மா வின் சரீரத்தில் பிரவேசம் செய்கிறேன். அவர்களைப் பராமரிக்க பிறகு ஜகதாம்பா நிமித்தமாக ஆகியுள்ளார். ஆதி தேவன் பிரம்மா மற்றும் ஜகதாம்பா சரஸ்வதி. இவர் யார்? பிரம்மாவின் மகள் ஆவார் என்று விவேகம் கூறுகிறது. ஆக படைப்பை எப்படிப் படைத்தார்? பிரம்மா மூலமாகப் படைத்தார் எனவே இவர் பெரிய தாய் ஆவார். பிறகு பராமரித்துக் கொள்வதற்காக மம்மாவும் உள்ளார். பாபாவும் உள்ளார். முதல் நம்பரில் சரஸ்வதி செல்கிறார். ஜகதாம்பா விற்கு எவ்வளவு மகிமை உள்ளது. நாம் தான் பிராமணர் ஆகி உள்ளோம் என்பதை இப்பொழுது நீங்கள் புரிந்து கொண்டுள்ளீர்கள். நாம் இறைவனின் மடியில் வந்துள்ளோம். இதில் கூட இரண்டுவிதமாக உள்ளார்கள். நேரிடைக் குழந்தைகள் மற்றும் மாற்றாந்தாய் குழந்தைகள் - ஒரே தாயின் குழந்தைகள் என்றால் இது போன்ற கேள்வியே எழாது. அவ்வாறாயின் ஏன் நேரிடை மற்றும் மாற்றான் என்று கூறப்படுகிறது. கூறுகிறார் யார் நேரிடைக் குழந்தைகள் ஆகிறார்களோ அவர்கள் நாங்கள். தூய்மையாகி ஆஸ்தி எடுப்போம் என்று பிரதிக்ஞை செய்கிறார்கள். ஆக அப்பேற்ப்பட்ட தூய்மையானவர்களே சிம்மாசனத்தில் அமரக்கூடிய வாரிசு ஆகிறார்கள். மாற்றான் குழந்தைகள் பிறகு பிரஜையில் சென்று விடுகிறார்கள். நேரிடைக் குழந்தைகளும் நிறைய ஆவார்கள். பிறகு அதில் கூட நம்பர் பிரகாரம் ஆவார்கள். யார் எந்தளவு புருஷார்த்தம் செய்வார்களோ அவர்கள் தான் தாய் தந்தையின் சிம்மாசனத்தில் அமருவார்கள். மம்மா பாபா சிம்மாசனத்தில் அமருகிறார்கள் என்றால் நமக்கும் கூட சிம்மாசனம் கிடைக்க வேண்டும். ஆனால் நம்பர் பிரகாரம் ஆவார்கள். எனவே இது யோகத்தின் (நினைவு) யாத்திரை ஆகும். பாபாவை நினைவு செய்ய வேண்டும். சுய தரிசனச் சக்கரத்தை சுற்ற வேண்டும். தனக்குச் சமமாக ஆக்க வேண்டும். தனக்குச் சமமாக ஆக்குவதில் மிகுந்த முயற்சி செய்ய வேண்டியிருக்கும். பிள்ளைகள் அறிமுகம் கொடுத்து தந்தையிடம் ரிஃப்ரெஷ் (புத்துணர்வு) ஆவதற்காக அழைத்து வருகிறார்கள், பாபா பார்க்கிறார் - யார் யார் தந்தை யிடமிருந்து முழு ஆஸ்தி எடுப்பார்கள், மற்ற எல்லா பக்கங்களிலிருந்தும் பற்றை நீக்கி ஒருபுறம் ஈடுபடுத்துபவர்கள் பாபா நம்மை உலகிற்கு எஜமானராக ஆக்கக் கூடியவர் ஆவார் என்பதை அறிந்துள்ளீர்கள். தந்தை கூறுகிறார், நான் உங்களை சொர்க்கத்திற்கு எஜமானராக ஆக்குகிறேன்.

பிறகு உங்கள் விருப்பம்போல் சூர்யவம்சத்தினர் ஆகுங்கள் அல்லது சந்திர வம்சத்தினர் ஆகுங்கள்.

எனவே தந்தை தானாகவே எல்லாமே செய்து கொண்டிருக்கிறார், பின் மறைந்து விடுவார். அடிக்கடி அவதாரமோ எடுப்பதில்லை, அவருக்கு தனக்கென்று சரீரமே இல்லை. அவர் ஒரே ஒரு முறை வருகிறார். நீங்களோ அடிக்கடி ஒரு சரீரத்தை விட்டுவிட்டு மற்றொன்றை எடுத்துக் கொண்டே இருக்கிறீர்கள். நான் புனர் ஜென்மத்தில் வருவதில்லை. எவ்வளவு நல்ல முறையில் விளக்குகிறார். இதற்கு முன்பு இந்த விஷயங்கள் புத்தியில் இருக்கவில்லை. மிக சாதாரணமாக வீட்டில் அமர்ந்தபடியே வழியில் செல்கையில் பாபா பிரவேசம் செய்து விட்டார். பிறகு தெரிய வந்தது. இப்பொழுது நாளுக்கு நாள் எல்லா விஷயங்களும் புத்தியில் பதிந்து கொண்டே போகின்றன. கூறுகிறார்கள் அல்லவா? நான் 7 நாட்கள் குழந்தை ஆவேன். இரண்டு மாதத்தின் குழந்தை ஆவேன். இந்த ஞானமோ ஒரு வினாடியில் கூட கிடைக்க முடியும். எவ்வளவு குழந்தைகள் இருக் கிறார்கள் வேறு எந்த சத்சங்கத்திலும் இவ்வளவு குழந்தைகள் இருக்க மாட்டார்கள். பிரஜாபிதா பிரம்மா மற்றும் ஜகதாம்பா கூட தந்தையின் மகன்-மகள் ஆவார்கள். ஆண், பெண் அல்ல. ஒரு ஆண் பெண் இத்தனை குழந்தைகளை எப்படி பெற்றெடுப் பார்கள். குக வம்சாவளியினுடையதோ பேச்சே இல்லை. யாரெல்லாம் முந்தைய கல்பத்தில் தாய் தந்தையினுடையவராகி ஆஸ்தி பெற்றார்களோ அவர்களே வந்து கொண்டு இருக்கிறார் கள். நாற்று நடப்பட்டு கொண்டே உள்ளது. தோட்டம் அல்லவா? இப்போது தேவி தேவதா தர்மத்தின் மலர்களோ இல்லை. மற்ற எல்லோருமே முட்கள் போல உள்ளார்கள், குத்து கிறார்கள். இது முட்களின் உலகம் ஆகும். தந்தை வந்து முட்களிலிருந்து மொட்டாக்கி, மொட்டிலிருந்து மலராக ஆக்குகிறார். ஸ்ரீமத் படி நடக்கவில்லை என்றால் பின் விழுந்து விடுகிறார்கள். இவர் விகாரங்களில் விழுந்து விட்டார் என்று பாபா தெரிந்து கொண்டு விடுகிறார். இப்பொழுது நீங்கள் தூய்மையில்லாத நிலையிலிருந்து தூய்மையாக ஆகிக் கொண்டு இருக்கிறீர்கள். மகாத்மா காந்தி கூட பதீத பாவனரை நினைவு செய்து கொண்டிருந்தார். உலகத்தில் ஆல் மைட்டி அத்தாரிட்டி (சர்வ சக்திவான் இறைவனின்) இராஜ்யம் ஆக வேண்டும் என்று விரும்பிக் கொண்டிருந்தார். அதை தந்தை தான் ஸ்தாபனை செய்வார். இப்பொழுது நாம் இந்த கம்சபுரியிலிருந்து கிருஷ்ணபுரி செல்ல வேண்டும் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள் பாரதத்தில் தான் சத்யுகம் இருந்தது. இலட்சுமி நாராயணரின் இராஜ்யம் இருந்தது. 5 ஆயிரம் வருடங்களின் விஷயம் ஆகும். 5 ஆயிரம் வருடங்களை விட பழைய பொருள் எதுவும் இருக்காது. இலட்சக் கணக்கான வருடங்களுக்கு முன்பானது என எந்த பொருளும் இருக்க முடியாது. பாருங்கள், நீங்கள் வயோதிக தாய்மார்கள் தாய் தந்தையரிடம் குட்காவ் கிராமத்திலிருந்து வந்துள்ளீர்கள். தாய் தந்தையிடமிருந்து ஆஸ்தி கிடைக்க வேண்டியுள்ளது. தந்தை கூட வயதான தாய்மார் களைப் பார்த்து குஷியடைகிறார்கள். 5 ஆயிரம் வருடங்கள் முன்பு கூட வந்து ஆஸ்தி எடுத்திருந்தீர்கள் எல்லாமே புருஷார்த்தத்தைப் பொறுத்தது ஆகும். மூதாட்டியர்களாகிய நீங்கள் இவ்வளவு ஞானம் எடுக்க முடியாது. இந்த தாத்தா முதியவரானாலும் மிகவும் நன்றாக படிக்கிறார். இளமையான சரஸ்வதி தாய் நன்றாக படிக்கிறார் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர் கள். ஏனென்றால், இவர் பிரம்மபுத்திரா நதி ஆவார். இவர் அவசியம் அதிகமாக படிக்கக் கூடும் அல்லவா?

இந்த முதியவர் எல்லோரையும் விட கூர்மையானவர். அவரோ பிறகு மகள் ஆனார். மூதாட்டிகளுக்குக் கூட மிகவும் சகஜம் தான். பாபாவை நினைவு செய்து கொண்டே இருங்கள்.

ஓஹோ! சிவபாபா மீது சமர்ப்பணம் ஆகிறேன்! நீங்களோ சுகதாமம் அழைத்துச் செல்கிறீர்கள். அவ்வளவே. இவ்வாறு குஷியில் இருந்தீர்கள் என்றாலும் கூட படகு கரையேறி விடும். எப்பொழுதும் சிவபாபா விளக்குகிறார் என்று உணருங்கள். இவரை (பிரம்மா) விட்டுவிடுங்கள். சிவபாபா தான் கூறுகிறார் என்றே நினையுங்கள். ஆக புத்தியோகம் சிவபாபாவிடம் செல்வதால் விகர்மங்கள் விநாசம் ஆகும். மம்மா கூட சிவபாபாவிடம் கேட்டு அதன் பின் கூறுகிறார். எப்பொழுதும் ஒரு சிவபாபாவினுடையதே நினைவு இருந்தது என்றால் விகர்மங்கள் விநாசம் ஆகிக் கொண்டே இருக்கும். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய்க் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் குட்மார்னிங். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) சிம்மாசனத்தில் அமரும் பக்குவமான வாரிசுக் குழந்தையாவதற்கு தூய்மையின் உறுதி எடுத்து நேரிடை குழந்தை ஆக வேண்டும். மற்ற தொடர்பை விடுத்து ஒருவருடன் தொடர்பு இணைக்க வேண்டும்.

(2) தனக்குச் சமமாக ஆக்கும் சேவை செய்ய வேண்டும். முள்ளிலிருந்து மொட்டு, மொட்டிலிருந்து மலர் ஆக வேண்டும் மற்றும் ஆக்க வேண்டும். புதிய செடியின் நாற்று நட வேண்டும்.

வரதானம் : கர்மங்களின் ஆழமான விளைவை அறிந்தவராகி, தர்மராஜபுரியின் தண்டனைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளக் கூடிய விகர்மங்களை வென்றவர் ஆகுக.

தண்டனையின் அனுபவத்தைத் தான் தர்மராஜபுரி என்று சொல்கின்றனர். மற்றப்படி தர்மராஜ புரி என்று ஒன்றும் தனியாக இடம் கிடையாது. கடைசியில் தான் செய்த பாவங்கள் யமதூதனின் பயமுறுத்தும் ரூபத்தில் முன்னால் வரும். அந்தச் சமயத்தில் பச்சாத்தாபம் மற்றும் வைராக்கியத்தின் நேரமாக இருக்கும். சிறு-சிறு பாவங்களும் கூட பூதங்கள் போல் தோன்றும். பச்சாத்தாபத்தின் கூக்குரல் எழும். எனவே அந்தத் தண்டனைகளின் ஃபீலிங்கில் இருந்து தப்புவதற்குக் கர்மங்களின் ஆழமான விளைவை அறிந்தவர் ஆகி, சதா சிரேஷ்ட கர்மம் செய்யுங்கள். மற்றும் விகர்மங்களை வென்றவர் ஆகுங்கள்.

சுலோகன்: யார் உடல்-மனம்-செல்வத்தால் பாபா மீது முழுமையாக பலியாகிறார்களோ, அவர்கள் தாம் கழுத்துக்கு மாலை ஆகிறார்கள்.

.